# <u>இயல்பு கூட்டப் பொருட்கள்</u>

1. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட நாகராஜா கோவில் தெற்கு ரத வீதி கதவு எண்.2/31 வணிக கட்டிடம் நகராட்சியால் சீல் வைக்கப்பட்டதை எதிர்த்து திரு.திருப்பதி தனராஜா – என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு W.P (MD) No.18132/2017 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 1) ஆணையர், நாகர்கோவில் நகராட்சி 2) திரு.S.ராஜாமணி 3) திரு.R.K.மணி ஆகியோர்களை சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு 22.09.2017–ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வழக்கில் மதுரை நகராட்சி வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன் ஆஜராகி உள்ளார். எனவே வழக்கிடை செலவுகளுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 13010/2017/எப்1

**தீர்மானம் எண்: 753– அங்கீகரிக்கப்பட்டது**

2. இந்நகராட்சிக்குட்பட்ட கேசவதிருபாபுரம், திருவள்ளுவர் தெரு புல எண்.A2/11–9&10 உரிமையாளர் தனது காம்பவுண்ட் சுவரை இடித்து ரோட்டில் வழி ஏற்படுத்தியதை இடையூறு செய்ததற்காக திரு.N.ஜாண்வெஸ்லி – என்பவர் மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றத்தில் O.S.No.249/2015 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 1) திரு.தர்மராஜ், 2) திரு.S.குமார், 3) நகராட்சி ஆணையர், நாகர்கோவில் ஆகியோர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. வழக்கில் Settlement Memo பெறப்பட்டுள்ளது. வழக்கில் நகராட்சி வழக்கறிஞர் திரு.நாகராஜன், ஆஜராகி உள்ளார். மேற்படி வழக்கிடை செலவுகளுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 15923/2015/எப்1

**தீர்மானம் எண்: 754– அங்கீகரிக்கப்பட்டது**

3. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 45, வாட்டர் டேங் ரோடு, கதவு எண்கள். 3-24/A, 2-1, 2-1/1, 2-1/2, 2-1/3, 2-1/4, 2-1/5, 2-1/6 வரிவிதிப்பு எண்கள். 74716, 74717, 74718, 74719, 74720, 74721, 74722, 74723 எண் கொண்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டதாக பொது மேலாளர் பாரத் சஞ்சர் நிகாம் லிட், என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P (MD)No.15966/17, W.P (MD)No.15967/17, W.P (MD)No.15968/17, W.P (MD)No.15969/17, W.P (MD)No.15970/17, W.P (MD)No.15971/17, W.P (MD)No.15972/17, W.P (MD)No.15973/17–க்கு வழக்கு தொடுத்து மனுதாரரால் (மேல்முறையீடு) ரிட் அப்பில் வழக்கு எண்.WA (MD) No.1282 to 1289 of 2017 and C.M.P (MD) No. 8937 to 8944 of 2017 –ல் வழக்கு தொடுத்து 22.09.2017–ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி தீர்ப்பு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ரிட் அப்பில் வழக்கு எண். W.A.(MD) No.1282 to 1289 of 17 and C.M.P (MD) No.8937 to 8944 of 2017 –ன் வழக்கில் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்தமைக்கு இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழக்கு செலவு கட்டணம் வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 8510/2017/அ9

**தீர்மானம் எண்: 755– அங்கீகரிக்கப்பட்டது**

4. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட கோட்டார் புனித சவேரியார் கோயில் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 24–ம் தியதி முதல் டிசம்பர் மாதம் 3–ம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற்று வருகிறது. மேற்படி திருவிழாவின் போது அரசு ஆயுர்வேத மருத்துவகல்லூரி முன்புறத்திலிருந்து கோட்டார், ஈத்தாமொழி ரோடு சந்திப்பு வரையிலும், செட்டிக்குளம் சந்திப்பு கிழக்கு பக்கத்திலிருந்து சவேரியார் கோயில் சந்திப்பு வரையிலும் (பயோனியர் முத்து மகால் முன் பகுதி மற்றும் கோயில் நுழைவு வாயில் பகுதி நீங்கலாக) சாலையோரம் இருபுறமும் உள்ள இடங்களில் அமைக்கப்படும் 5'x5' அளவுள்ள தற்காலிக ஸ்டால்களுக்கு நாளொன்றிற்கு ரூ.100/– வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கப்பட்டு வரப்படுகிறது. அது போன்று இவ் ஆண்டும் 24.11.2017 முதல் 03.12.2017 வரை 10 தினங்கள் திருவிழா நடைபெறும் போது அமைக்கப்பட உள்ள ஒவ்வொரு தற்காலிக ஸ்டால்களுக்கும் நாளொன்றிற்கு ரூ.100/– வீதம் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம் வழங்கிட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்காகும் விளம்பர செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 18664/2015/அ14

**தீர்மானம் எண்: 756– அங்கீகரிக்கப்பட்டது**

5. நாகர்கோவில் நகராட்சி பிறப்பு / இறப்பு பதிவாளருக்கு எதிராக தொடுக்கப்பட்ட பிறப்பு சான்றில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக மாண்புமிகு சென்னை நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நடைபெற்ற வழக்குகளில் நகராட்சி சார்பாக வாதாடிய வகையில் நகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் என்பவருக்கு கீழ்க்கண்ட பட்டியல் படி தொகை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வழக்கு எண் | மனுதாரர் பெயர் | வழக்கு விபரம் | நீதிமன்ற தீர்ப்பு விபரம் | வழக்கின் தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | W.P(MD)No.1970/2015 | ஜாண் கிறிஸ்து ராஜ் | குழந்தை பெயர் திருத்தம் | கீழ் நீதிமன்றத்தை அணுக மனுதாரரை அறிவுறுத்தி வழக்கு தள்ளுபடி | ரூ.7,500/– |
| 2 | W.P(MD)No.20776 of 2015 | பார்த்தீப குணசீலன் | குழந்தை பெயர் திருத்தம் | கீழ் நீதிமன்றத்தை அணுக மனுதாரரை அறிவுறுத்தி வழக்கு தள்ளுபடி | ரூ.7,500/– |
| 3 | W.P(MD)No.16050 of 2016 | டோமினிக்அருள் ராஜ் | தந்தை பெயர் திருத்தம் | மனுதாரர் வழக்கை திரும்பப் | ரூ.7,500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பெற்றுள்ளார் | |

கோப்பு எண்: **10495/H3/VS/2016**

**தீர்மானம் எண்: 757– அங்கீகரிக்கப்பட்டது**

**6.** இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தின் அருகாமையில் பாராளு மன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாடு திட்டம் **2017–2018–**ன் கீழ் அம்மா திருமண மண்டபம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ**3/2072/2017** நாள்.**03.10.2017–**ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி செய்ய திட்ட மதிப்பீடு (DPR) தயார் செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| **1)** | Pavithraa Associates<br>Chennai | - Rs.2,52,000/- |
| **2)** | Prorate in proportion<br>Chennai | - Rs. 2,64,000/- |
| **3)** | Design Spectrum<br>Chennai | - Rs. 2,74,000/- |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Pavithraa Associates Chennai விலை விகிதத்தை ஏற்று அனுமதி வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: **13398/2017/இ3**

**தீர்மானம் எண்: 758– அங்கீகரிக்கப்பட்டது**

**7.** இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணனிகள், மடி கணனிகள் பிரிண்டர்கள் On Line UPS கள் ஸ்கேன்கள் ஆகியவற்றை வருடாந்தர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கடந்த **20.10.2017** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கும் முடிவிற்கும்.

| | | |
|---|---|---|
| **1)** | ACT Automation<br>174, SKP Building<br>M.S.Road, Vadasery. | மதிப்பீட்டைவிட **1.69**% குறைவு |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட **1.69**% குறைவாக கொடுக்கப்பட்டுள்ளதால் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்: **1357/2017/இ3**

**தீர்மானம் எண்: 759– அங்கீகரிக்கப்பட்டது**

**8.** இந் நகராட்சி அலுவலக பொறியர் பிரிவு, பொது பிரிவு, வருவாய் பிரிவு, சுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் வசூல் மையங்கள் ஆகியவற்றில் உள்ள கணனிகளுக்கு புதிதாக வாங்கப்பட்ட Invertor Battery –ல் இருந்து மின்சாரம் கணனிகளுக்கு வழங்கும் பொருட்டு **8** பிரிவுகளுக்கும் **96** எண்ணம் Switch Box அமைத்திடவும் அதற்காகும் செலவினம் ரூ.**1,53,000/–**க்கும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **12481/2017/இ3**

**தீர்மானம் எண்: 760– அங்கீகரிக்கப்பட்டது**

**9.** இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள இடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2017–2018–**ன் கீழ் ரூ.**400.00** லட்சத்தில் அம்மா திருமண மண்டபம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ**3/2072/2017** நாள்.**03.10.2017–**ன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்டவாறு பணி செய்யஅங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **14494/2016/இ3**

**தீர்மானம் எண்: 761– அங்கீகரிக்கப்பட்டது**

**10.** இந்நகராட்சியில் உள்ள **22** வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள தெருவிளக்குகளை பராமரிக்கும் பொருட்டும், அலுவலக பராமரிப்பு பணி மற்றும் **52** வார்டுகளில் புதிய தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டி அதற்கு தேவையான மின்சாதன உதிரி பொருட்கள் **2017–2018–**ம் நிதியாண்டிற்கு வாங்கிட ரு.**17,00,000/–**க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பொது நிதியில் செலவு செய்திட அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **010319/2017/இ4**

**தீர்மானம் எண்: 762– அங்கீகரிக்கப்பட்டது**

**11.** AMRUT SAAP 2017-2020 பார்க் திட்டத்தின் கீழ் பூங்கா அமைத்தல் பணிக்கு இந்நகராட்சிக்கு ரூ.**273.00** லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு பூங்காகள் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | முக்கடல் அணையில் பூங்கா அமைத்தல் மூன்றாம் கட்ட பணி | ரூ.**99.76** லட்சம் |
| 2 | புளியடியில் பூங்கா அமைத்தல் | ரூ.**98.51** லட்சம் |
| 3 | ராஜீவ் நகர் பூங்கா அமைத்தல் | ரூ.**38.69** லட்சம் |
| 4 | வி.என்.காலணி பூங்கா அமைத்தல் | ரூ.**36.04** லட்சம் |
| | | ரூ.**273.00** |

மேற்கண்டவாறு தேர்வு செய்யப்பட்ட பணிகள் செய்ய அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **11804/2017/இ3**

**தீர்மானம் எண்: 763– அங்கீகரிக்கப்பட்டது**

12. இந்நகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளிலும் டெங்கு தடுப்பு பணியின் ஒரு பகுதியான முதிர்ந்த கொசுக்களை புகை மருந்து அடித்து ஒழிக்கும் பணியானது ஒவ்வொரு வார்டின் உள்ள அனைத்து வீடுகளிலும் சுழற்ச்சி முறையில் 15 நாட்களுக்கு ஒருமுறை புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வடகிழக்கு பருவமழை மற்றும் டெங்குவின் தாக்கம் கூடுதலாக இருப்பதால் 7 நாட்களுக்கு ஒருமுறை புகைமருந்து அடிக்கப்படவேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 27.10.2017 அன்று நடைபெற்ற டெங்கு ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே கொசு அழிக்கும் இயந்திரம் (RPF-10-SP) (Pulse fog) கூடுதலாம் 6 எண்ணம் DGS RD விலையில் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் (Seven star trading Company, Chennai) வாங்குவதற்கு ஆகும் செலவின தொகை ரூ.4,60,000/–க்கு அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 22939/2017/எச்2

**தீர்மானம் எண்: 764– அங்கீகரிக்கப்பட்டது**

13. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் 2011–2012–ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரேசன் கடை கட்டி முடிக்கப்பட்டு மேற்படி கடையினை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு கட்டிடத்திற்கு வர்ணம் பூசிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.41,000/–க்கு அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 13192/2017/இ1

**தீர்மானம் எண்: 765– அங்கீகரிக்கப்பட்டது**

14. இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தின் கிழக்கு பக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டண கழிப்பறைக்கு குடிநீர் வசதி, மின்வசதி மற்றும் இதர tiles ஒட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,60,000/–க்கு அனுமதியும் மேற்படி கழிவறையினை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட பிரிவு எண்.15–ன் கீழ் மேற்படி பணியினை ஒப்பந்தக்காரர் திரு.ஜென்கின்ஸ் முலம் மேற்கொண்டது மன்றத்தின் பதிவிற்காக.

கோப்பு எண்: 10029/2017/இ1

**தீர்மானம் எண்: 766– அங்கீகரிக்கப்பட்டது**

15. இந்நகராட்சிக்குட்பட்ட கோட்டார் இசங்கன் விளை பகுதியில் திரு.அன்பு என்பவர் தனது வீட்டிற்கு செல்லும் வழியில் 1) திரு.மந்திர மூர்த்தி, 2) திருமதி. செல்வபாய், 3) திரு.சுயம்புலிங்கம், 4) திரு.தினேஷ் என்பவர்கள் கட்டியுள்ள இடையூறான படிகள் அகற்ற கோரி வழக்கு எண்.O.S.299/2017 தொடர்ந்துள்ளார். வழக்கில் 5–ம் பிரதிவாதியாக நகராட்சி ஆணையாளரை சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு நகராட்சி வழக்கறிஞர் திரு.நாகராஜன் – அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கிடை செலவுகளுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 13550/2017/எப்1

**தீர்மானம் எண்: 767– அங்கீகரிக்கப்பட்டது**

16. இந்நகராட்சிக்குட்பட்ட வலம்புரிவிளை குப்பை கிடங்கில் பெறப்படும் குப்பைகள் அனைத்தும், வலம்புரிவிளை கிடங்கினுள் அமைக்கப்பட்ட எடை மேடை இயந்திரம் மூலம் எடையிடப்பட்டு சேகரிக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் எடை மேடை இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டு எடைபோடும் பணியானது தாமதம் ஆவதுடன் தனியார் எடைமேடை மூலம் எடைபோட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே எடைமேடையினை சரி செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.64,000/—க்கு அனுமதியும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதிகள் 1920 பிரிவு 15—ன் கீழ் பணி செய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப் பெற்றதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| விலைப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|
| 1 | M/s Babulens Enterprises<br>செட்டிகுளம் ஜங்சன் | ரூ. 63,189/— |
| 2 | M/s Universal Scales<br>K.P road, Kottar | ரூ. 71,499/— |
| 3 | M/s Vimal Scales Service<br>தேவி கோடு, செருவாலூர் | ரூ. 81,184/— |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s Babulens Enterprises, செட்டிகுளம் ஜங்சன், நாகர்கோவில் நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியது மன்றத்தின் பதிவிற்காக.

கோப்பு எண்: 12625/2017/இ1

**தீர்மானம் எண்: 768— அங்கீகரிக்கப்பட்டது**

17. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையத்தில் Underground Cable மற்றும் Three Phase main switch ஆகியவை பழுதுபட்டுள்ளதால் அனைத்து உபரி சாமான்கள் வெளி மார்கெட்டில் வாங்கும் பணிக்கு 20.10.2017 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

**ஒப்பந்தப்புள்ளியின் விபரம்**

1. திரு.G.ராஜன்
   ஒப்பந்தக்காரர்
   (—) 0.23% மதிப்பீட்டை விட குறைவு

2. திரு.A. பாண்டியன்
   ஒப்பந்தக்காரர்
   1% முன்வைப்புத் தொகை செலுத்தவில்லை

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திரு.பாண்டியன் 1% முன் வைப்பு தொகை செலுத்தவில்லை. எனவே அவர் நீக்கம் செய்யப்பட்டு அடுத்தப்படியாக திரு.G.ராஜன்—க்கு (—) 0.23% மதிப்பீட்டைவிட குறைவாக செலுத்தியுள்ளதை ஏற்று அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 9158/2017/இ4

**தீர்மானம் எண்: 769— அங்கீகரிக்கப்பட்டது**

**18.** இந்நகராட்சிக்கு சொந்தமான வேப்பமூடு பூங்கா அருகில் பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்திருந்த பெட்ரோல் பங்கினை கையகப்படுத்தப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பொருட்களை அப்புறப்படுத்த **31.10.2017** அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் நான்கு நபர்கள் கலந்து கொண்டதை அதில் T.ஜெயராஜ், ராமன்புதூர், நாகர்கோவில் என்பவர் உயர்ந்த ஏலக்கேள்வியாக ரூ.**89,000/–**க்கு கேட்டுள்ளதை ஏற்று அனுமதி வழங்கவும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பர கட்டணம் செலுத்தவும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **11874/2017/இ3**

**தீர்மானம் எண்: 770– அங்கீகரிக்கப்பட்டது**

**19.** இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய பயணிகள் தங்குமிடம் அமைத்திட ரூ.**3.70** லட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியினை RCC Column கள் அமைத்து Framed Stricture type –ல் பணி செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பணி செய்ய போதிய இடம் இல்லாத காரணத்தால் Muminium Partition Structure மற்றும் false Ceiling அமைத்து பணிகள் செய்திட மதிப்பீடு மாற்றியமைத்து அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்திடவும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **14494/2016/இ3**

**தீர்மானம் எண்: 771– அங்கீகரிக்கப்பட்டது**

**20.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டிற்கு Copactors Classis –ல் Body கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்ட வகைக்கு விளம்பர கட்டணம் ரூ.**95256/–** Ravi publicity service Chennai –க்கு வழங்க அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **21962/2015/இ3**

**தீர்மானம் எண்: 772– அங்கீகரிக்கப்பட்டது**

**21.** இந்நகராட்சி கணனி பிரிவில் உள்ள கணனிகளுக்கு தேவையான Toner கள் வாங்க **27.10.2017** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1) | Lakshmi Cartridges<br>Bangalore | - Rs.7550/- |
| 2) | Jupiter Enterprises<br>Namakkal | - Rs. 10350/- |
| 3) | ACT Automation<br>Nagercoil | - Rs. 16700/- |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி Lakshmi Cartridges Bangaloreகொடுத்துள்ளதை அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **20026/2009/இ3**

**தீர்மானம் எண்: 773– அங்கீகரிக்கப்பட்டது**

22. நாகர்கோவில் நகராட்சியில் NULM திட்டத்தின் கீழ் CLC (City Livelihoods Centre) திறம்பட மேம்படுத்தும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.38038/2013/UPA-2 நாள். 09.06.2014–ன் படியும், நகராட்சி நிர்வாக துணை ஆணையர் கடிதம் ந.க.எண்.32976/2012/UPA-2 நாள். 16.07.2015 –ன் படியும், NULM –CLC குறித்த அரசு வழிகாட்டுதல்படி செயல்பட நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட கூட்டமைப்புகளுக்கு சமுதாய அமைப்பாளர்களால் அறிவிக்கப்பட்டதில் புதுமை இணைந்த கரங்கள் கூட்டமைப்பு மட்டும் முன் வந்து CLC திறம்பட செயல்படுத்த விருப்பம் தெரிவித்து மனு சமர்பித்துள்ளார்கள். புதுமை இணைந்த கரங்கள் கூட்டமைப்புக்கு ஒப்படைத்து திட்டப்பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி கூட்டமைப்புக்கு முதல் இரண்டு வருட காலத்திற்கு CLC அரசு வழிகாட்டுதல்படி CLC நிதியிலிருந்து ரூ.10,00,000/– வழங்கப்படும். மேற்படி ரூ.10,00,000/–தில் மூன்று தவணைகளாக கீழ்கண்ட விபரப்படி வழங்கப்படும்.

1. CLC திட்டம் செயல்பட ஆரம்பித்த முதல் வாரத்தில் முதல் தவணை 30% வழங்கப்படும்.

2. CLC –க்கு நியமிக்கப்பட்ட பணியாளர் பட்டியல், பணியின் தன்மை, CLC யின் முன்னேற்றம் படி ஆய்வு செய்து இரண்டாவது தவணையாக 40% வழங்கப்படும்.

3.CLC தொடங்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருவாய் முன்னேற்றம் மற்றும் செயல்பாட்டு திறனை ஆய்வு செய்து மூன்றாவது தவணையாக 30% வழங்கப்படும். மூன்றாவது ஆண்டிலிருந்து நாகர்கோவில் நகராட்சி நிதி ஒத்துழைப்பு இல்லாமல் தன்னிச்சையாக CLC செயல்படவும் மேற்படி அரசு வழிகாட்டுதல் படி CLC திட்டம் திறம்பட செயல்படுத்தும் பொருட்டு இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி பஸ் ஸ்டாண்டில் அம்மா உணவகம் அருகில் பஸ் ஸ்டாண்டு மேல்மாடியில் புதிதாக கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மேற்படி கட்டிடத்தில் NULM – CLC திட்டம் செயல்பட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு. மேற்படி கட்டிடம் முழுமையாக முடிவுற்று ஒப்படைக்கும் வரை தற்காலிகமாக நாகர்கோவில் நகராட்சி NULM Room 01.12.2017 முதல் புதுமை இணைந்த கரங்கள் கூட்டமைப்பு மூலம் திட்டப் பணிகள் CLC பணி திறம்பட செயல்படுத்த அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: 13453/2017/எச்4

**தீர்மானம் எண்: 774– அங்கீகரிக்கப்பட்டது**

23. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள எலக்ட்ரோ குளோரினேட்டர் அறையில் இயங்கி கொண்டிருந்த 6MLD Capacity Electro Chlorinator unit –க்குரிய Transformer coil பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணிக்கு மன்ற தீர்மானம் எண்.666 நாள்.30.08.2017 –ன் படி ரூ.35,000/–ன் நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 20.10.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|
| 1) | திரு.ற்றி. திருமலர் முகம் ஒப்பந்தக்காரர் | - 1.43% குறைவு |
| 2) | ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் ஒப்பந்தக்காரர் | - 0.50% குறைவு |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.43% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரார் திரு.ற்றி. திருமலா் முகம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 101/17–18/இ2

**தீர்மானம் எண்: 775– அங்கீகரிக்கப்பட்டது**

24. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.38–ல் இருளப்பபுரம் ஜங்சன் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் உள்ள ஏணி துருப்பிடித்துள்ளதால் அதனை மாற்றி இரும்பு ஏணி அமைக்க தயாா் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,00,000/–க்கு அனுமதியும், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 120/17–18/இ2

**தீர்மானம் எண்: 776– அங்கீகரிக்கப்பட்டது**

25. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump house IV –ல் இயங்கி கொண்டிருந்த 75HP Centrifugal motor pump (Unit no2) காயில் கருகியும், Pump Shaft பழுதடைந்துள்ளதை சரி செய்ய தயாா் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.84,000/–க்கு மன்ற தீர்மானம் எண்.669 நாள்.30.08.2017 அன்று நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 20.10.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|
| 1) | திரு.ற்றி. திருமலா் முகம் ஒப்பந்தக்காரா் | - 0.30% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2) | ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் ஒப்பந்தக்காரா் | - 0.91% மதிப்பீட்டைவிட குறைவு |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.30% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரார் திரு.ற்றி. திருமலா் முகம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 102/17–18/இ2

**தீர்மானம் எண்: 777– அங்கீகரிக்கப்பட்டது**

26. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump house II –ல் PH203 எண் கொண்ட (Spare) ஆக உள்ள 30Hp Submersible motor pump காயில் கருகி பழுதடைந்துள்ளதை சரி செய்ய மன்ற தீர்மானம் எண்.667 நாள்.30.08.2017 அன்று ரூ.37,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 20.10.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|
| 1) | திரு.ற்றி. திருமலா் முகம் ஒப்பந்தக்காரா் | - 1.49% மதிப்பீட்டைவிட குறைவு |

| | | |
|---|---|---|
| 2) | ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் ஒப்பந்தக்காரர் | - **0.43%** மதிப்பீட்டைவிட அதிகம் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **1.49%** குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.ற்றி. திருமலர் முகம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: **104/17–18/இ2**

**தீர்மானம் எண்: 778– அங்கீகரிக்கப்பட்டது**

**27.** இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump house III –ல் உள்ள North side unit –II –ல் **50** HP Submersible motor pump -ம் South side –ல் Unit –IV –ல் இயங்கி கொண்டிருந்த PH 304 எண் கொண்ட **50** HP Sub motor pump coil பழுதடைந்துள்ளதை சரி செய்யும் வேலைக்கு மன்ற தீர்மானம் எண்.**668** நாள்.**30.08.2017–**ன் படி ரூ.**98,500/–**க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க **20.10.2017** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| **ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்** | | |
|---|---|---|
| 1) | திரு.ற்றி. திருமலர் முகம் ஒப்பந்தக்காரர் | - **1.37%** மதிப்பீட்டைவிட குறைவு |
| 2) | ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் ஒப்பந்தக்காரர் | - **0.54%** மதிப்பீட்டைவிட அதிகம் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **1.37%** குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.ற்றி. திருமலர் முகம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: **105/17–18/இ2**

**தீர்மானம் எண்: 779– அங்கீகரிக்கப்பட்டது**

**28.** இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump house I –ல் இயங்கி கொண்டிருந்த PH 105 எண் கொண்ட **30** HP Submersble motor பம்ப் காயில் கருகி பழுதடைந்துள்ளதை சரி செய்யவும் மற்றும் பம்ப் ஹவுஸ் I–ல் Spare ஆக இருந்த Unit No.PH106 எண் கொண்ட **30** HP Submotor பம்பு –ம் பழுதடைந்துள்ளதை சரி செய்ய மன்ற தீர்மானம் எண்.**670** நாள்.**30.08.2017–**ன் படி ரூ.**60,000/–**க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க **20.10.2017** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| **ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்** | | |
|---|---|---|
| 1) | திரு.ற்றி. திருமலர் முகம் ஒப்பந்தக்காரர் | - **1.55%** மதிப்பீட்டைவிட குறைவு |
| 2) | ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் ஒப்பந்தக்காரர் | - **0.36%** மதிப்பீட்டைவிட அதிகம் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.55% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.ற்றி. திருமலர் முகம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 103/17–18/இ2

**தீர்மானம் எண்: 780– அங்கீகரிக்கப்பட்டது**

**29.** இந் நகராட்சிக்குட்பட்ட வடசேரி கிராமம் வெட்டூர்ணிமடம் சாயக்காரன் பரப்பு விளை நகர புல எண்.G2/106–ல் கதவு எண்.214/2–ல் இயங்கி வரும் பள்ளிக்கூட கட்டிடத்தில் உள்ள பாதிக்கும் கட்டிட விதிகளுக்கு விலக்கு அளிக்க கோல செயின்ட் அலோசியஸ் மேல் நிலைப்பள்ளியின் தாளாளர் நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிடக்கோரி சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் நகராட்சி ஆணையர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக்கி W.P No:17249/2015–ல் வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கில் மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது 4 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தீர்ப்பின் அடிப்படையில் நகர் ஊரமைப்புத்துறை இயக்குனரால் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன் வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்தியமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/– வழங்க கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணம் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் அங்கீகாரத்திற்காக.

க.வி.எண்.634/2009/எப்3

**தீர்மானம் எண்: 781– அங்கீகரிக்கப்பட்டது**

**30.** இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் சந்தையில் புதியதாக கட்டப்பட்டுள்ள 260 கடைகளுக்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.S.செந்தில் வேல் என்பவர் கடை எண் 123–க்கான உரிமம் எடுத்திருந்தார். அன்னார் மேற்படி கடையில் வெற்றிலை, பாக்கு வியாபாரம் தான் செய்யமுடியும் என்றும் தான் காய்கறி வியாபாரம் செய்வதால் தனக்கு கடை எண். 179 மாற்றி தருமாறு கோரியுள்ளார்.

மேற்படி கடை எண் 179 தற்போது யாரும் ஏலம் எடுக்காததினால் காலியாக உள்ளது. எனவே திரு.S.செந்தில் வேல் என்பவருக்கு கடை எண். 179 மாற்றி கொடுப்பதினால் நகராட்சிக்கு இழப்பு ஏதும் இல்லை. எனவே திரு. திரு.S.செந்தில் வேல் என்பவருக்கு கடை எண்.123–ல் இருந்து கடை எண்.179 மாற்றி கொடுப்பதற்கும், அன்னார் கடை எண்.123–க்கு செலுத்தி இருந்த வைப்புத் தொகை மற்றும் 12 மாத வாடகை முன் வைப்புத் தொகையும் கடை எண்.179–க்கு மாற்றம் செய்திட அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: 04023/2017/அ13

**தீர்மானம் எண்: 782– அங்கீகரிக்கப்பட்டது**

**31.** நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2017–2018 –ன் கீழ் இந்நகராட்சி வார்டு எண்.26, பிரைட் தெருவில் தார்தளம் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/1139/2017 நாள்.21.09.2017 –ன் படி நிர்வாக

அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கடந்த 31.10.2017 அன்று கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.கே. மணிகண்டன் | மதிப்பீட்டைவிட 24.99% குறைவு |
| 2 | திரு. ஐ. பாஸ்கரன் | மதிப்பீட்டைவிட 24.99% குறைவு |
| 3 | திரு.ற்றி. துரை | மதிப்பீட்டைவிட 24.99% குறைவு |
| 4 | திரு. கே.செல்வன் | மதிப்பீட்டைவிட 24.99% குறைவு |
| 5 | திரு. எஸ். செல்லம் | மதிப்பீட்டைவிட 14.50% குறைவு |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே. மணிகண்டன் மதிப்பீட்டைவிட 24.99% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத் தொகை ரூ.62,475/– செலுத்திய பின்னர் அனுமதி வழங்க அங்கீகாரத்திற்கு.

ம. எண்: 109/17–18

**தீர்மானம் எண்: 783– அங்கீகரிக்கப்பட்டது**

32. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ன் கீழ் இந்நகராட்சி வார்டு எண்.41 மேலசூரன்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு போர்வெல் மின்மோட்டார் அமைக்க மாவட்ட ஆட்சியர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/1139/2017 நாள்.21.09.2017–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2017 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.ற்றி. துரை | மதிப்பீட்டைவிட 16.63% குறைவு |
| 2 | திரு. ஐ. பாஸ்கரன் | மதிப்பீட்டைவிட 10.10% குறைவு |
| 3 | திரு.கே. மணிகண்டன் | மதிப்பீட்டைவிட 10.00% குறைவு |
| 4 | திரு. கே.செல்வன் | மதிப்பீட்டைவிட 5.04% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 16.63% குறைவாக கொடுத்துள்ள துரை ஒப்பந்ததாரருக்கு கூடுதல் வைப்புத் தொகையாக ரூ.20786/– செலுத்திய பின்னர் அனுமதி வழங்க அங்கீகாரத்திற்கு.

ம. எண்: 107/17–18

**தீர்மானம் எண்: 784– அங்கீகரிக்கப்பட்டது**

33. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2017–2018–ன் கீழ் இந்நகராட்சி வார்டு எண்.22 பூவன் குடியிருப்பு பத்திரகாளியம்மன் கோவில் அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/1139/2017 நாள்.21.09.2017–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கடந்த 31.10.2017 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.ற்றி. துரை | மதிப்பீட்டைவிட 16.99% குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | திரு. கே.நடராஜன் | மதிப்பீட்டைவிட 11.00% குறைவு |
| 3 | திரு.ஜ. பாஸ்கரன் | மதிப்பீட்டைவிட 10.17% குறைவு |
| 4 | திரு. கே.செல்வன் | மதிப்பீட்டைவிட 5.04% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி திரு.ற்றி. துரை மதிப்பீட்டைவிட 16.99% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத் தொகையாக ரூ.23,361/– செலுத்திய பின்னர் அனுமதி வழங்க அங்கீகாரத்திற்கு.

ம. எண்: 108/17–18

**தீர்மானம் எண்: 785– அங்கீகரிக்கப்பட்டது**

**34.** இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump house –II–ல் இயங்கி கொண்டிருந்த PH 201 எண் கொண்ட 30HP Sub motor pump –ல் காயில் பழுதடைந்துள்ள நிலையில் பம்புகள் முழுமையாக சர்வீஸ் செய்யும் நிலையில் உள்ளதால் அதனை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.37,000/–க்கு அனுமதியும், குடிநீர் வினியோக அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதிகள் எண்.15–ன் கீழ் ஒப்பந்தக்காரர் திரு.சிவப்பிரகாசம் என்பவர் மூலம் பணி செய்ததையும் பார்வைக்கும் பதிவிற்கும்.

கோப்பு எண்: 122/17–18/இ2

**தீர்மானம் எண்: 786– அங்கீகரிக்கப்பட்டது**

**35.** இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump house –III–ல் South side –ல் PH 303 எண் கொண்ட 50HP Sub motor பம்ப் காயில் கருகிய நிலையில் பம்ப்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.49,500/–க்கு அனுமதியும், குடிநீர் வினியோக அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதிகள் எண்.15–ன் கீழ் ஒப்பந்தக்காரர் திரு.சிவப்பிரகாசம் என்பவர் மூலம் பணி செய்தது பார்வைக்கும் பதிவிற்கும்.

கோப்பு எண்: 121/17–18/இ2

**தீர்மானம் எண்: 787– அங்கீகரிக்கப்பட்டது**

**36.** இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகள் மற்றும் வடசேரி பேருந்து நிலையம் ஆகியவற்றில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் Roc No.4549/2012/Do3 நாள்.06.11.2014 படி ஓராண்டு பணிகள் மேற்கொள்ளவும், 10% அதிகபடுத்தி இரண்டாண்டு நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஓராண்டு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி (24.09%) கொடுத்த M/sAnantha Electrical கோயம்புத்தூர் நிறுவனம் மூலம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.1141, நாள்.29.12.2014–ன் படி வேலை உத்தரவு வழங்கப்பட்டு 20.02.2015 முதல் 28.02.2016 வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் 01.03.2016 முதல் 28.02.2018 வரை இரண்டு வருடத்திற்கு அதே ஒப்பந்க்காரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி நிரக்கில் மேற்கொள்ள 95.00 லட்சம், செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.773, நாள்.05.08.2016–ன் படி ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்படி பணிக்கான செலவு விபரங்கள் பின்வருமாறு:—

| வருடம் | அனுமதிக்கப்பட்ட தொகை |
|---|---|
| 2015—2016 | 113.00 இலட்சம் |
| 2016—2017<br>2017—2018 | 95.00 இலட்சம் |
| **செலவு விபரம்:—** | |
| 02/2015 முதல் 02/2016 | 75,82,013.00 |
| 03/2015 முதல் 07/2017 | 1,25,28,925.00 |
| **மொத்தம்** | **2,01,10,938,00** |
| அனுமதிக்கப்பட்ட தொகை | 208,00,000 |
| செலவு செய்யப்பட்டது | 2,01,10,938 |
| **மீதம்** | **6,89,062** |
| **வழங்கப்படவேண்டியது:—** | |
| 08/2017 முதல் 02/2018 வரை | 7x7,62,627 =53,38,389 |
| மீதம் | (—) = 6,89,062 |
| **இதர செலவு** | 46,49,000 |

எனவே, மேற்படி செலவினம் ரூ.47.00 இலட்சத்திற்கு ஒப்புதல் மற்றும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: 1415/2014/இ4

**தீர்மானம் எண்: 788— அங்கீகரிக்கப்பட்டது**

37. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குனர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1406/2017/ஆ1, நாள். 30.10.2017 படி திருநெல்வேலி மண்டல நகராட்சிகளின் தெருவிளக்கு பணிகளுக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.79,200/— சேவை வரி கட்டணம் ரூ.3960/— ஆக மொத்தம் 83160/—யை அக்கார்டு விளம்பர நிறுவனத்திற்கு கோவில்பட்டி நகராட்சியிலிருந்து செலுத்தியுள்ளதால் இந்நகராட்சிக்கான பங்கு தொகை ரூ.4158/— வங்கி வரைவோலை அல்லது காசோலையாக கோவில்பட்டி நகராட்சி ஆணையருக்கு செலுத்திடவும், அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 23484/2010/இ4

**தீர்மானம் எண்: 789— அங்கீகரிக்கப்பட்டது**

38. இந்நகராட்சி அதிகாரிகள் குடியிருப்பு வளாகத்தினுள் உள்ள ஆணையாளர் குடியிருப்பில் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள தீர்மானம் எண்.643 நாள்.17.08.2017—ன் படி ரூ.95,000/—க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 25.10.2017 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்** |
|---|

| | | |
|---|---|---|
| 1) | திருவி. வரதராஜன்<br>ஒப்பந்தக்காரர் | (–) 0.12% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2) | திரு.ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன்<br>ஒப்பந்தக்காரர் | (+) 1.61% மதிப்பீட்டைவிட அதிகம் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.12% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருவி. வரதராஜன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 113/17–18/இ1

**தீர்மானம் எண்: 790– அங்கீகரிக்கப்பட்டது**

**39.** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் M.G.R நூற்றாண்டு விழா நிகழ்ச்சிக்கு நாகர்கோவில் நகருக்கு வருகை தர உள்ளார்கள். இந்நிலையில் நகரிலுள்ள பெரும்பாலான சாலைகள் UGD திட்டபணிகளால் சேதமடைந்துள்ள நிலையில் நிகழ்ச்சி நடைபெற உள்ள நாகராஜா திடலில் ஒட்டிய நாகராஜா கோவில் கிழக்கு மேற்கு மற்றும் வடக்கு ரத வீதிகளில் தார்தளம் அமைக்கவும், அவ்வை சண்முகம் சாலையில் (மணியடிச்சான் கோவில் முதல் ஒழுகினசேரி ஜங்சன் வரை B.M அமைத்து தார்தளம் அமைக்கவும், WCC கல்லூரி சாலையில் மிகவும் பழுதடைந்துள்ள மணிமேடை ஜங்சன் முதல் கல்கோவில் வரை தார்தளம் அமைக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். இந்நிலையில் நாகராஜா கோவில் கிழக்கு மேற்கு மற்றும் வடக்கு ரத வீதி சாலைகளில் தார்தளம் அமைக்க (ம.எண்.377/15–16) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.P.தங்கசாமி ஒப்பந்தக்காரருக்கு 17.52% குறைவு தொகையில் கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும் அவ்வை சண்முகம் சாலையில் (மணியடிச்சான் கோவில் முதல் ஒழுகினசேரி ஜங்சன் வரை BM அமைத்து தார்தளம் அமைக்க (ம.எண்.370/15–16) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.K.கைலாஷ்குமார் ஒப்பந்தக்காரருக்கு 16.33% குறைவு தொகையில் இப்பணி கிடைக்கப்பெற்று பணி செய்யாமல் இரு பணிகளும் நிலுவையில் உள்ளது. எனவே மேற்படி பணிகளை செய்வதற்கு அதே ஒப்பந்தக்காரருக்கு வேலை உத்தரவு வழங்கிடவும், வார்டு எண்.31–ல் W.C.C கல்லூரி சாலையில் மணிமேடை ஜங்சன் முதல் கல்கோவில் வரை புதிதாக தார்தளம் அமைக்க குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண்.3583/2017/B1 நாள்.26.10.2017–ன் படி அனுமதி வழங்கியதன் அடிப்படையில் 23.10.2017 அன்று E-Tender மூலம் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|
| 1) | திரு. ஒய்.ஜெயசிங்<br>ஒப்பந்தக்காரர் | - 25.00% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.1467865.65) |
| 2) | திரு. ரவிச்சந்திரன்<br>ஒப்பந்தக்காரர் | - 25.00% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.1467963.51) |
| 3) | திரு. கே. கைலாஷ்குமார்<br>ஒப்பந்தக்காரர் | - 25.00% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.1467977.02) |
| 4) | திரு.ஜி.ஜெயராஜ்<br>ஒப்பந்தக்காரர் | - 20.00% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.1565735.68) |

வரப்பெற்றுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஒய்.ஜெயசிங் மற்றும் திரு. ரவிச்சந்திரன் ஆகிய இரு ஒப்பந்தக்காரர்களும் மதிப்பீட்டை விட 25.00% குறைவாக

கொடுத்துள்ளார்கள். எனவே நகராட்சி பொறியாளர் கையேடு பக்கம் எண்.8—ல் வரிசை எண்.2.7.1—ன் படி நீக்கம் செய்யப்பட்டு அதற்கு அடுத்தபடியாக உள்ள ஒப்பந்தக்காரர் திரு.கே.கைலாஷ் குமார் என்பவர் மதிப்பீட்டை விட 24.99% (ரூ.1467977.02) குறைவு கொடுத்துள்ளார். எனவே கூடுதல் வைப்புத் தொகை ரூ.249,900/—ம் செலுத்திய பின்னர் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கிடவும், மேற்படி மூன்று வேலைகளும் பொது நிதியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் 14 நிதிக்குழுவில் இப்பணிகளை சேர்த்து செய்திடவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 110/17—18/இ1

**தீர்மானம் எண்: 791— அங்கீகரிக்கப்பட்டது**

40. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23—ல் பெருமாள் நகர் 2—ல் தார்சாலை அமைக்க மதிப்பீடு எண்.179/15—16 நாள்.18.08.2015 அன்று E-Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திரு.P.இசக்கிமுத்து என்பவர் மதிப்பீட்டைவிட 24.99% குறைவாக எடுத்துள்ளார். மன்ற தீர்மானம் எண்.1098 நாள்.15.10.2015—ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூடுதல் வைப்புத்தொகை ரூ.74970/— செலுத்திய பின்னர் 04.05.2017 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் இதுநாள் வரை பணி நடைபெறவில்லை. ஒப்பந்தக்காரர் தான் கட்டிய 1% முன் வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகையினை திரும்ப கேட்டுள்ளார். தற்போது பணி மேற்க்கொள்ள காலதாமதமாகும் என்பதாலும், நகராட்சியில் நிதி நிலைமை சீராக இல்லாததாலும் தற்பொழுது பணி செய்யவில்லை. எனவே மேற்படி பணியினை ரத்து செய்து ஒப்பந்தக்காரர் திரு.P.இசக்கிமுத்து என்பவர் செலுத்தியுள்ள 1% முன் வைப்புத் தொகை ரூ.6700/— மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.74,970/—ஐ திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 179/15—16/இ1

**தீர்மானம் எண்: 792— அங்கீகரிக்கப்பட்டது**

41. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23—ல் கீழ ஆசாரிப்பள்ளம் பனிமய மாதா ஆலயம் செல்லும் சாலையில் தார் தளம் அமைப்பதற்கு மதிப்பீட்டு எண்.233/15—16 நாள்.08.09.2015 அன்று E-Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திரு.P.இசக்கிமுத்து என்பவர் மதிப்பீட்டைவிட (—) 25.00% குறைவாக எடுத்துள்ளார். மன்ற தீர்மானம் எண்.1262/ நாள்.18.12.2015 —ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூடுதல் வைப்புத் தொகை ரூ.68,750/—ஐ செலுத்திய பின்னர் 4.5.2017 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி இடத்தில் பணி நடைபெறவில்லை. எனவே ஒப்பந்தக்காரர் தான் செலுத்தியிருந்த 1% EMD தொகை மற்றும் 1% கூடுதல் வைப்புத்தொகையையும் திரும்ப கேட்டுள்ளார். தற்போது பணி மேற்க்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும் நகராட்சியில் நிதி நிலைமை சீராக இல்லாததாலும் பணி செய்யவில்லை. எனவே இப்பணியினை ரத்து செய்து ஒப்பந்தக்காரர் திரு.P.இசக்கிமுத்து என்பவர் செலுத்தியுள்ள 1% முன் வைப்புத்தொகை ரூ.5500/— மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.68,750/—ம் திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 233/15—16/இ1

**தீர்மானம் எண்: 793— அங்கீகரிக்கப்பட்டது**

42. அரசு ஊழியர்கள் அலுவலகத்தில் பணியாற்றும் நேரங்களில் அடையாள அட்டையை கட்டாயம்அணிந்திருக்கவேண்டும் என அரசு உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, நகராட்சி

பணியாளர்கள் அனைவருக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதற்காகும் தோராய செலவினம் ரூ.50,000/—க்கு மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு 22.09.2017 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. ராவணன் ஸ்டுடியோ ரூ.110/—
2. உதயா, டிஜிட்டல் கலர்லேப் & ஸ்டுடியோ ரூ.100/—
3. தமிழன் ஸ்டுடியோ ரூ.107/—

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய உதயா, டிஜிட்டல் கலர் லேப் & ஸ்டுடியோ நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 23484/2010/இ4

**தீர்மானம் எண்: 794— அங்கீகரிக்கப்பட்டது**

**43.** இந்நகராட்சிக்கு சொந்தமான சூரங்குடி நீரேற்று நிலையம் மற்றும் ஹவுசிங் போர்டு நீரேற்று நிலையம் ஆகிய இரண்டு இடங்களிலும் Hypo Chlorination plant அமைக்க ZINE Colour sheet மூலமாக shed அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,48,000/—க்கு அனுமதியும், குடிநீர் வினியோக அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 14031/2017/இ2

**தீர்மானம் எண்: 795— அங்கீகரிக்கப்பட்டது**

**44.** இந்நகராட்சிக்கு சொந்தமான சூரங்குடி நீரேற்று நிலையம் மற்றும் ஹவுசிங் போர்டு நீரேற்று நிலையம் மற்றும் தலைமை நீரேற்று நிலையம், கிருஷ்ணன்கோவில் உள்ள III (மூன்றாவது) சுத்திகரிப்பு படுகைகளில் செயல்படுத்தப்பட உள்ள Hypo Chlorination plant —க்கு தேவையான solution (liquid) தொடர்ந்து நான்கு மாதங்களுக்கு வினியோகம் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.5,59,000/—க்கு அனுமதியும், குடிநீர் வினியோக அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 14029/2017/இ2

**தீர்மானம் எண்: 796— அங்கீகரிக்கப்பட்டது**

**45.** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் தொலைபேசி செய்தியின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Bucket Chlorination முறை நடைபெறும் பகுதிகளில் உடனடியாக Hypo Chlorination (liquid) முறை செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதால், அதன்படி சூரங்குடி நீரேற்று நிலையம், மற்றும் ஹவுசிங் போர்டு நீரேற்று நிலையம் ஆகிய இரண்டு இடங்களிலும் தலா 1.5 MLD அளவு உடைய Hypo Chlorination plant —ம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் கிருஷ்ணன்கோவிலில் III (மூன்றாவது) சுத்திகரிப்பு படுகைக்கு7.MLD திறன் உடைய Hypo Chlorination plant —ம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,66,000/—க்கு அனுமதியும், குடிநீர் வினியோக அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 14029/2017/இ2

**தீர்மானம் எண்: 797– அங்கீகரிக்கப்பட்டது**

46. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26–ல் கிறிஸ்துநகர் மெயின்ரோடு, கிறிஸ்துநகர் C.S.I ஆலயம் முன்புறம், மற்றும் C.S.I மெட்ரிகுலேசன் ஸ்கூல் அருகே உள்ள சாலைகள் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதால் மேற்படி சாலைகளில் பேட்ச் ஒர்க் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.68,000/– (அறுபத்தி எட்டாயிரம்) –க்கு அனுமதியும், இப்பணியினை நகராட்சிகள் சட்ட விதிகள் எண்.15–ன் கீழ் ஒப்பந்தக்காரர் திரு.K.கைலாஷ் குமார் என்பவர் மூலம் மேற்க்கொண்டது பார்வைக்கும் பதிவிற்கும்.

கோப்பு எண்: 123/17–18/இ1

**தீர்மானம் எண்: 798– அங்கீகரிக்கப்பட்டது**

47. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் உள்ள சவேரியார் கோயில் திருவிழா நடைபெற உள்ளதால் கோயிலை சுற்றியுள்ள சாலைகளில் சிமிண்ட் கான்கிரீட் மற்றும் தார்தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,80,000/–க்கு மன்ற அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 13978/2017/இ1

**தீர்மானம் எண்: 799– அங்கீகரிக்கப்பட்டது**

48. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நாகர்கோவில் நாகராஜாகோவில் திடலில் நடைபெறும் M.G.R நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள இருப்பதால் நாகராஜா கோவில் திடலை சுற்றி Fencing அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச செலவு தொகை ரூ.50,000/– (ஐம்பதாயிரம்)–க்கு அனுமதியும், மேற்படி பணியினை மேற்க்கொள்ள விலைப்புள்ளிகள் பெற்றதின் விபரம் பின்வருமாறு.

| விலைப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|
| 1) | திரு.எ. ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் | ரூ.50,000/– |
| 2) | திரு.வி. வரதராஜன் | ரூ.55,000/– |
| 3) | திரு. வி.வைகுண்டராஜ் | ரூ.58,000/– |

மேற்படி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.எ. ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் என்பவருக்கு பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதிகள் எண்.15–ன் கீழ் வேலை உத்தரவு வழங்கி பணி செய்தது பார்வைக்கும் பதிவிற்கும்.

கோப்பு எண்: 13191/2017/இ1

**தீர்மானம் எண்: 800– அங்கீகரிக்கப்பட்டது**

**49.** இந்நகராட்சி வளாகத்தில் அலுவலக கட்டிடம் அமைக்க மதிப்பீடு Plan elevation, soil test, மற்றும் Structural design தயாரிக்க Consultant மூலம் செய்ய மன்ற தீர்மானம் எண்.**781** நாள்.**17.10.2014–**ல் செலவுத் தொகை ரூ.**5,61,800/–**க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் ந.க.எண்.**9535/2017/**F1 நாள்.**02.11.2017–**ல் நகரமைப்பு ஆய்வாளரின் குறிப்பில் கதவு எண்.B3/1-2E, in ward D, Block. 3, T.S.No.1-2(pt) என்ற இடத்தில் பழைய கட்டிடத்தை இடித்து புதிதாக Office Building கட்டவும், அதற்கான Soil test report, Structural design, stability certificate & estimate தயார் செய்து தர கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினைச் செய்யவும், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் Consultanty மூலம் மேற்க்கொள்ள உத்தேச செலவு தொகை ரூ.**5,00,000/–**க்கு (ஐந்து லட்சம்) அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: **7558/2014/இ1**

**தீர்மானம் எண்: 801– அங்கீகரிக்கப்பட்டது**

**50.** நாகர்கோவில் நகராட்சி **52** வார்டுகளை கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாகும் இதில் **19** வார்டுகளின் துப்புரவு பணியானது நகராட்சி மூலமாகவும் மீதமுள்ள **33** வார்டுகளின் துப்புரவு பணியானது SRP Clean Enviro Pvt.Ltd, மூலமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் மயமாக்கப்பட்ட **33** வார்டுகளில் மேற்படி நிறுவனமானது **12.12.2013** முதல் அனைத்து துப்புரவு பணியினையும் முறையே **258** துப்புரவு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரித்தல், **25** ஆட்டோ மற்றும் **2** டம்பர் பிளைசர், **3** டிம்போ, **2** காம்பேக்டர் ஆகிய வாகனங்கள் மூலமாக சேகரித்து உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லுதல் ஆகிய திடக்கழிவு மேலாண்மை பணிகளை Tipping Fee அடிப்படையில் **686** லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வருட உயர்வு தொகை **10** சதவீதம் என்ற அடிப்படையிலும் செயல்படுத்தி வருகிறது.

**11.12.2016** உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்ததையொட்டி ஒப்பந்த அடிப்படையில் மனித சக்தி மட்டும் பெற்று துப்புரவு பணி மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி வழங்கக்கோரப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து அனுமதி வரப்பெறாததால் பொது நலன்கருதி மேற்படி தனியார் பராமரிப்பிற்கு **12.02.2016** முதல் **12.03.2017** வரை, **13.03.2017** முதல் **12.06.2017** வரை, மற்றும் **13.06.2017** முதல் **12.09.2017** வரை கூடுதலாக கால நீட்டிப்பு செய்து மன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.K.Dis.No.7883/P3/2017, நாள். **02.08.2017** –ன் படி **373** பணியாளர்களை கொண்டு மனித சக்தி மட்டும் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய 777 லட்ச மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் **10.08.2017–**ல் E-Tender மற்றும் மாநில செய்தி மலர் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டு **20.09.2017** –ல் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

இந்நிலையில் **13.09.2017** முதல் **12.10.2017** வரை கால நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது 20.09.2017–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை உயர்நீதிமன்ற மதுரை கிளை தடையாணை பிறப்பித்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. எனவே நீதிமன்ற உத்தரவு கிடைக்கப்பெற்று ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி தொடங்கும் வரை மேலும் மூன்று மாத கால அளவிற்கு (13.10.2017 முதல் 12.01.2018 வரை) கால நீட்டிப்பு செய்திட அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.18831/2012/எச்1

**தீர்மானம் எண்: 802– அங்கீகரிக்கப்பட்டது**

51. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு மாலைமலர் நாளேட்டிற்கு ரூ.4560/– வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 7072/2017/இ3

**தீர்மானம் எண்: 803– அங்கீகரிக்கப்பட்டது**

52. தமிழ்நாடு முதன்மை செயலாளர் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசாணை (நிலை) எண்.360, நாள். 12.10.2017

அரசாணை நிலை எண்.528 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை AB2 நாள்.29.12.1999–ன் படி பிறப்பு இறப்பு பதிவு விதிகள் 2000 –ல் 9–10 மற்றும் 13 ஆகிய விதிகளுக்கு திருத்தம் செய்து கட்டணம் அமைத்து உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி பொருள் தொடர்பாக கட்டணம் விபரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | விதி எண் | விபரம் | பழைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | 9(1) | காலதாமதப் பதிவு (21 தினங்களுக்கு மேல் 30 தினங்களுக்குள்) | ரூ.2/– | ரூ.100/– |
| 2 | 9(2) | காலதாமதப்பதிவு (30 தினங்களுக்கு மேல் ஒரு வருடத்திற்குள் உரிய கட்டணம் மற்றும் ஆணையர் அவர்களின் உத்திரவு படி | ரூ.5/– | ரூ.200/– |
| 3 | 9(3) | காலதாமதப்பதிவு (ஒரு வருடத்திற்கு மேல் உரிய கட்டணம் மற்றும் கோட்டாட்சியருக்கு குறையாத நிர்வாக நீதிபதி அவர்களின் உத்திரவு படி | ரூ.10/– | ரூ.500/– |
| 4 | 10 | குழந்தையின் பெயர் பதிவு கட்டணம் ஒரு ஆண்டிற்கு மேல் | ரூ.2/– | ரூ.100/– |
| 5 | 13(1) (a) | பிறப்பு இறப்பு பதிவில்லா சான்று பெற தேடுதல் கட்டணம் ஒரு ஆண்டிற்கு | ரூ.2/– | ரூ.100/– |
| 6 | 13(i) (b) | கூடுதல் ஒவ்வொரு ஆண்டிற்கும் தேடுதல் கட்டணம் | ரூ.2/– | ரூ.100/– |
| 7 | 13(i) (c) | பிறப்பு இறப்பு சான்று வழங்க | ரூ.5/– | ரூ.200/– |
| 8 | 13(i) (d) | கூடுதல் நகல் ஒன்றுக்கு | ரூ.5/– | ரூ.200/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 13(i) (e) | பதிவில்லா சான்று வழங்க | ரூ.2/– | ரூ.100/– |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளபடி கட்டணம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: 14272/2017/எச்3

**தீர்மானம் எண்: 804– அங்கீகரிக்கப்பட்டது**

53. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட புனித சவேரியார் கோயில் திருவிழாவை முன்னிட்டு **24.11.2017 –ம்** தியதி முதல் **03.12.2017–ம்** தியதி முடிய **10** நாட்கள் சாலை ஓரங்களில் அமைக்கப்படும் தற்காலிக கடைகளில் கட்டணம் வசூல் செய்திடும் உரிமத்திற்கு **09.11.2017–ம்** தியதி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் கீழ்கண்ட விபரப்படி கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொண்டவர்கள் விபரம் | கேள்வி விபரம் | |
|---|---|---|---|
| | | ஏல நடவடிக்கை ரூ. | ஒப்பந்தப்புள்ளி ரூ. |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திரு.எம்.ராஜன்<br>21, சவேரியார் கோவில் தெரு<br>கோட்டார், நாகர்கோவில் –2 | 13,00,000/– | 14,05,000/– |
| 2 | திரு. சி.ஆல்பர்ட் ஜாப்ரின்<br>செம்மாங்குடி ரோடு<br>நாகர்கோவில் | 12,45,000/– | 13,61,900/– |
| 3 | திரு.ஜி.ஷாஜன்<br>8–9 கடைத்தெரு<br>அக்கரை, சுசிந்திரம் | 12,46,000/– | – |

மேற்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொண்டு திரு.எம்.ராஜன் என்பவரால் ரூ.**14,05,000/–**க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கடந்த ஆண்டு உரிமம் ஒப்படைக்கப்பட்ட தொகை ரு.**11,55,000/–** மற்றும் **3** ஆண்டு சராசரி ரூ.**10,20,666/–**ஐ காட்டிலும் அதிகமாக உள்ளது. எனவே மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்புக் கொண்டு உத்தரவு வழங்கிட அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்: 18664/2015/அ14

**தீர்மானம் எண்: 805– அங்கீகரிக்கப்பட்டது**

54. நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் தென்மேற்கு பக்கம் புதியதாக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகள் 1 முதல் 10 வரை குத்தகை உரிமம், இளங்கடை ஆடு அறுவைகூடம் பக்கதில் அமைந்துள்ள கடைகள் (கடை எண் 3 முதல் 6 வரைதனியாக), வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் (Phase I) கடை எண் 03 மற்றும் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் (Phase II) கடை எண் 13 ஆகிய கடைகளுக்கு 16-08-2017 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரபெற்றதில் இளங்கடை ஆடு அறுவைகூடம் பக்கதில்

அமைந்துள்ள கடைகள் (கடை எண் 3 முதல் 6 வரைதனியாக), வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் (Phase I) கடை எண் 03 மற்றும் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் (Phase II) கடை எண் 13 ஆகிய கடைகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன் வரவில்லை. வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் தென்மேற்கு பக்கம் புதியதாக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகள் 1 முதல் 10 வரை குத்தகை உரிமத்திற்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் கீழ்கண்டவாறு.

| **வ.எண்** | **கடை எண்** | **பெயர் மற்றும் முகவரி** | **பொது ஏல கேள்வி** | **ஒப்பந்தப்புள்ளி விபரம்** |
|---|---|---|---|---|
| 1 | 1 | திரு. மணிகண்ட பிரபு<br>544/1B சார்லஸ் ரோடு<br>வெட்டூர்ணிமடம்<br>நாகர்கோவில் | 6000/- | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை |
| 2. | 2. | திரு. S.T. பிள்ளை<br>3/231 A பிள்ளையார் கோயில் தெரு<br>கணியாகுளம்<br>பார்வதிபுரம் | 6000/- | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை |
| 3. | 3. | திரு. L. ராஜேந்திரன்<br>3/165-A அன்னை இல்லம்<br>அனந்தன்நகர்<br>ஆசாரிபள்ளம் அஞ்சல் | 6000/- | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை |
| 4 | 4. | திரு. I. அசோகன்<br>த/பெ ஐசக்<br>1-15A தேவன் விளை<br>கப்பியறை அஞ்சல்<br>கன்னியாகுமரி மாவட்டம் | 12400/- | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை |
| 5 | | திரு. S.T. பிள்ளை<br>3/231 A பிள்ளையார் | | ஒப்பந்தப்புள்ளி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோயில் தெரு<br>கணியாகுளம்<br>பார்வதிபுரம் | 12300/- | கோரப்படவில்லை |
| 6 | 5 | திரு. A. ராஜகோபால்<br>22, முத்தமிழ்தெரு<br>நாகர்கோவில் | பொது ஏலம் கோர முன் வரவில்லை | 13000/ |
| 7 | 6 | திரு. S.T. பிள்ளை<br>3/231 A பிள்ளையார் கோயில் தெரு<br>கணியாகுளம்<br>பார்வதிபுரம் | 18500/- | 13000/- |
| 8 | | திரு. விஜயகுமார்<br>66, புலவர் விளை<br>P.W.D ரோடு<br>நாகர்கோவில் | 18700/- | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை |
| 9 | 7 | திரு. விஜயகுமார்<br>66, புலவர் விளை<br>P.W.D ரோடு<br>நாகர்கோவில் | 16500/- | 15678/- |
| 10 | | திரு. நிர்மல் ராஜன்<br>4/183 C A.K. நகர்<br>புத்தேரி | 21060/- | 702/- |
| 11 | | திரு. மணிகண்ட பிரபு<br>544/1B சார்லஸ் ரோடு | 16000/- | 13000/- |

<table>
<tr><td></td><td rowspan="2"></td><td>வெட்டூர்ணிமடம்<br>நாகர்கோவில்</td><td></td><td></td></tr>
<tr><td>12</td><td>திரு. E. ஐயப்பன்<br>150 கணேசபுரம் ரோடு<br>நாகர்கோவில்</td><td>9000/-</td><td>9000/-</td></tr>
<tr><td>13.</td><td rowspan="2">8</td><td>திரு. I. அசோகன்<br>த/பெ ஐசக்<br>1-15A தேவன் விளை<br>கப்பியறை அஞ்சல்<br>கன்னியாகுமரி மாவட்டம்</td><td>15600/-</td><td>ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை</td></tr>
<tr><td>14.</td><td>திருமதி. ஜான்சிராணி<br>12, பள்ளி விளை<br>வெட்டூர்ணிமடம்<br>நாகர்கோவில்</td><td>16100/-</td><td>13100/-</td></tr>
<tr><td>15.</td><td rowspan="2">9</td><td>திரு. L. ராஜேந்திரன்<br>3/165-A அன்னை இல்லம்<br>அனந்தன்நகர்<br>ஆசாரிபள்ளம் அஞ்சல்</td><td>10000/-</td><td>12000/-</td></tr>
<tr><td>16</td><td>திரு. K. விஜிலா<br>225, (28LB) வள்ளாலர் நகர்<br>இராமன்புதூர்<br>நாகர்கோவில்</td><td>பொது ஏலம் கோர முன் வரவில்லை</td><td>13100/-</td></tr>
<tr><td>17</td><td rowspan="2">10</td><td>திரு. K. வேலப்பன்<br>68A தெலுங்கு செட்டி தெரு<br>கிருஷ்ணன்கோவில்</td><td>16500/-</td><td>16500/-</td></tr>
<tr><td>18</td><td>திரு. நிர்மல் ராஜன்</td><td>பொது</td><td></td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4/183 C A.K. நகர் புத்தேரி | ஏலத்தில் கலந்து கொண்டு கேள்வி கேட்கவில்லை | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை |
| 19 | | திரு. I. அசோகன் த/பெ ஐசக் 1-15A தேவன் விளை கப்பியறை அஞ்சல் கன்னியாகுமரி மாவட்டம் | பொது ஏலம் கோர முன் வரவில்லை | 13050/- |
| 20 | | திரு. நிர்மல் ராஜன் 4/183 C A.K. நகர் புத்தேரி | பொது ஏலம் கோர முன் வரவில்லை | 1051/- |
| 21 | 10 | திரு. L. ராஜேந்திரன் 3/165-A அன்னை இல்லம் அனந்தன்நகர் ஆசாரிபள்ளம் அஞ்சல் | பொது ஏலம் கோர முன் வரவில்லை | 12000/- |

மேற்காணும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கடை எண்கள் 1, 2, மற்றும் 3-க்க குறைவான வாடகை தொகை கோரப்பட்டுள்ளது எனவே கடை எண்கள் 1, 2, 3-க்கு மறு ஏலம் கோரலாம்.

கடை எண்கள் 4, 5, 6, 7, 8, 9 மற்றும் 10-க்கு உயர்ந்தபட்ட ஏல கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களுக்கு கடை உரிமம் வழங்கவும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்: **21034/2016/அ13**

**தீர்மானம் எண்: 806– அங்கீகரிக்கப்பட்டது**